# திருவாரூர் மாவட்டம், கொராடாச்சேரி பேரூராட்சிக்குட்பட்ட அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் எந்திரவியல் ஆய்வகம்

## கலெக்டர், எம்.எல்.ஏ. திறந்து வைத்தனர்



**திருவாரூர்,டிச.20-**
திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி பேரூராட்சிக் குட்பட்ட அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், 6 முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி, மாணவிகள் பயன்பெறும் வகையில் எந்திரவியல் ஆய்வகத்தினை கலெக்டர் வ.மோகனச்சந்திரன், அவர்களும், திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.க லை வா ணன் அவர்களும் திறந்து வைத்து, குத்துவிளக்கேற்றினர்.

இந்நிகழ்வில், கலெக்டர் பள்ளி மாணவியர்களிடம் தெரிவித்ததாவது...

அரசுப் பள்ளிகளில் 6 முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களிடம் செயல்முறை அடிப்படையிலான கற்றலின் மூலம் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் கருத்துகளை வலுப்படுத்தவும் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறனை வளர்க்கவும், குழுவாக இணைந்து செயல்படக்கூடிய திறனைக் கற்றுக் கொள்ளவும், படைப்பாற்றலை வளர்க்கவும் முதற்கட்டமாக 15 மாவட்டத்தில் தலா ஒரு பள்ளி என்ற அளவில் 15 அரசுப் பள்ளிகளில் எந்திரவியல் ஆய்வகங்கள் நிறுவப்பட்டு உள்ளன. அதனடிப்படையில், திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி பேரூராட்சிக் குட்பட்ட அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், 6 முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவிகள் பயன்பெறும் வகையில் எந்திரவியல் ஆய்வகம் இன்றைய தினம் (19.12.2025) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்ஆய்வகத்தினை மாணவிகள் அனைவரும் நல்ல முறையில் பயன்படுத்தி, மேன்மேலும் கல்வியில் முன்னேற்றம் அடையவேண்டும். ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களை மதித்தல், எந்தவித தீய எண்ணமுமின்றி இருத்தல், நல்ல குணங்களை வளர்ந்துக்கொள்ளுதல் உள்ளிட்ட சமூகக்கல்வி மற்றும் பள்ளிக்கல்வி இரண்டிலும் மாணவர்கள் சிறந்து இருத்தல் வேண்டும்.

அப்துல்கலாம் ஐயா மாணவப்பருவத்தில் அவரது ஆசிரியரிடம் வினவிய கேள்வியின் மூலமே அவரது சிந்தனை திறனை வளர்ந்து வாழ்வில் வெற்றி பெற்றுள்ளார். கற்றது கைம்மண்ணளவு என்ற எண்ணத்துடன் அதிகளவில் கற்று வாழ்வில் வெற்றி பெற வேண்டும். மாணவிகள் பல்வேறு விதமான அறிவியில் கண்டுபிடிப்புகளை நிகழ்த்தி பல சாதனைகளை புரிய வேண்டுமென கலெக்டர் வ.மோகனச்சந்திரன், அறிவுறுத்தினார்கள்.

இந் நி கழ்ச் சி யில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சுகப்பிரியா, மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் ராஜேஸ்வரி மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர், தலைமையாசிரியர், பள்ளி ஆசிரியர்கள், பள்ளி மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

# கரூர் மாவட்ட அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்களுடன் ஆலோசனை கூட்டம்

## சிறப்பு வரைவு வாக்காளர் பட்டியல் பார்வையாளர் தலைமையில் நடைபெற்றது




**கரூர்,டிச.20-**
கரூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் (19.12.2025) மாவட்ட சிறப்பு வரைவு வாக்காளர் பட்டியல் பார்வையாளர் நீரஜ் கர்வால் தலைமையில், மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் முன்னிலையில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்ளுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட சிறப்பு வரைவு வாக்காளர் பட்டியல் பார்வையாளர் தெரிவித்ததாவது, இந்திய தேர்தல் ஆணையத்தின் ஆணையின்படி கரூர் மாவட்டத்தில் சிறப்பு வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணி மேற்கொள்ளப்பட்டது. இதன் முதல் கட்டமாக வாக்காளர் கணக்கெடுப்பு பணிகள் கடந்த நவம்பர் 4ம் தேதி துவங்கி, இதற்காக கரூர் மாவட்டத்திலுள்ள 8,98,362 வாக்காளர்களுக்கு கணக்கெடுப்பு படிவங்கள் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வீடுவீடாக சென்று வழங்கினார்கள்.

பூர்த்தி செய்யப்பட்டு திரும்ப பெறப்பட்ட படிவங்கள் இந்திய தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டன. கரூர் மாவட்டத்தில் இப்பணிகள் முழுமையாக முடிவடைந்துள்ளது. வரைவு வாக்காளர் பட்டியலில் வாக்காளர்கள் பெயர் விடுபட்டிருந்தாலோ அல்லது 01.01.2026 அன்று 18 வயது பூர்த்தி அடையவுள்ள இளம் வாக்காளர்கள் தங்கள் பகுதியில் உள்ள வாக்குச்சாவடி நிலை அலுவலர் அல்லது வட்டாட்சியர் அலுவலகத்தில் படிவம் 6 மற்றும் உறுதிமொழி படிவத்தினை வழங்கி வாக்காளர் பட்டியலில் சேர்த்துக்கொள்ளலாம்.

கரூர் மாவட்டத்தில் இறுதி வாக்காளர் பட்டியல் வருகின்ற பிப்ரவரி 2026 வெளியிடப்படும். இவ்வாறு மாவட்ட சிறப்பு வரைவு வாக்காளர் பட்டியல் பார்வையாளர் நீரஜ் கர்வால் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து, குளித்தலை நகராட்சி, மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள நகராட்சி நடுநிலைப் பள்ளி வாக்குச்சாவடி மையத்தினை மாவட்ட சிறப்பு வரைவு வாக்காளர் பட்டியல் பார்வையாளர் நீரஜ் கர்வால் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் கு.விமல் ராஜ், குளித்தலை சார் கலெக்டர் தி.சுவாதி ஶ்ரீ கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமது பைசல், மாவட்ட வழங்கல் அலுவலர் சிவக்குமார், உதவி ஆணையர் கலால் முருகேசன், மாநகராட்சி ஆணையர் கே.எம்.சுதா, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரநிதிகள் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் நடந்த பசுமை விழாவில் மரக்கன்றுகள் நடும் பணி

## கலெக்டர் மு.அருணா துவக்கி வைத்தார்

**புதுக்கோட்டை,டிச.20-**
புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக வளாகத்தில், தமிழ்நாடு வனத்துறையின் பசுமை தமிழ்நாடு இயக்கம் மற்றும் தனியார் நிறுவனங்களான கோத்தாரி இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன் லிமிடெட், எஸ்னோரா கம்பெனி இணைந்து நடத்தும் மரம் நடும் பசுமை விழாவில், கலெக்டர் மு.அருணா, (19.12.2025) மரக்கன்றுகள் நடும் பணியினை துவக்கி வைத்தார்.



பின்னர் கலெக்டர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழகத்தை பசுமை மிகுந்த மாநிலமாக மாற்றிடும் வகையில் எண்ணற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில் மாவட்டங்கள் தோறும் மரக்கன்றுகளை நடுதல், மரக்கன்றுகள் நடுவதற்கான விழிப்புணர்வுகள் ஏற்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் குறைந்த பட்சம் 55 மரக்கன்றுகள் வீதம் சுமார் 2,000 மரக்கன்றுகள் தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் நடுவதற்கு திட்டமிடப் பட்டுள்ளது.

அந்தவகையில் இன்றையதினம் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் தமிழ்நாடு வனத்துறையின் பசுமை தமிழ்நாடு இயக்கம் மற்றும் தனியார் நிறுவனங்களான கோத்தாரி இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன் லிமிடெட், எஸ்னோரா கம்பெனி ஆகியவற்றின் பங்களிப்புடன் ஆலமரம், இலுப்பை, பெருநெல்லி, நாவல், வேம்பு, பாதாம், நீர்மருது, தூங்கு மூஞ்சி, வகை, கொடுக்காபுளி, இயல்வாகை, வேங்கை, மாங்கனி, மயிற்கொன்றை உள்ளிட்ட 55 வகையான மரக்கன்றுகள்; நடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அனைவரும் சுற்றுச்சூழலை பாதுகாத்து எதிர்கால தலைமுறைகளுக்கு பசுமையான பூமியை விட்டுச் செல்லும் உயரிய நோக்குடன் இயற்கையை நேசிக்கும் உணர்வையும், சமூக பொறுப்புணர்வையும் உணர்ந்து ஒவ்வொருவரும் குறைந்தது ஒரு மரத்தை நட்டு பராமரிப்போம் என்ற உறுதியுடன் செயல்பட்டால், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் வலிமையான சமூகமாக நாம் உருவெடுக்க முடியும் எனவும் கலெக்டர் மு.அருணா, தெரிவித்தார்.

இந் நி கழ்ச் சி யில், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன் , மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) எஸ்.திருமால், துணை கலெக்டர் (பயிற்சி) செல்வி.பிரியங்கா, மாவட்ட வன அலுவலர் எஸ்.கணேசலிங்கம், வனச்சரக அலுவலர் மு.சதாசிவம், மாவட்ட பசுமைக்குழு உறுப்பினர்கள் விஸ்வநாதன், கண்ணன், பசுமைத் தோழி செல்வி.கமலா, கோத்தாரி இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன் லிமிடெட், எஸ்னோரா கம்பெனி பணியாளர்கள், வனக்காப்பளர்கள், வனக்காவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# திருச்சி, துவாக்குடி அரசு மேல்நிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள எந்திரவியல் ஆய்வகத்தை திறந்து வைத்து, கையேடுகளை வெளியிட்டு, எந்திரவியல் ஆய்வகங்களின் செயல்பாடுகள்

## அமைச்சர்கள் கே.என்.நேரு , அன்பில் மகேஸ் பொய்யாமொழி பார்வையிட்டனர்



**திருச்சி,டிச.20-**
அரசுப் பள்ளிகளில் 6 முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களிடம் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறனை வளர்க்கவும், குழுவாக இணைந்து செயல்படக் கூடிய திறனைக் கற்றுக் கொள்ளவும், படைப்பாற்றலை வளர்த்திடும் வகையில் தமிழ்நாடு அரசு திருச்சிராப்பள்ளி, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, புதுக்கோட்டை, சேலம், தூத்துக்குடி, திருப்பத்தூர், திருவாரூர், தருமபுரி, கள்ளக்குறிச்சி, சென்னை, கோயம்புத்தூர், சிவகங்கை, வேலூர், விருதுநகர் ஆகிய 15 மாவட்டங்களில் தலா ஒரு எந்திரவியல் ஆய்வகம் என 15 எந்திரவியல் ஆய்வகங்கள் ரூ.6.09 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டு உள்ளன.

அந்த வகையில் எந்திரவியல் ஆய்வகங்களை தொடங்கி வைக்கும் விதமாக திருச்சிராப்பள்ளி, துவாக்குடி அரசு மேல்நிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள எந்திரவியல் ஆய்வகத்தினை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு , பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் (19.12.2025) தொடங்கி வைத்து, 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கான எந்திரவியல் ஆய்வகங்கள் குறித்த பயிற்சி கையேட்டினை வெளியிட்டு, எந்திரவியல் ஆய்வங்களின் செயல்பாடுகளை பார்வையிட்டு மாணவ, மாணவிகளுடன் கலந்துரையாடினார்கள்.

மேலும் திருச்சிராப்பள்ளி, துவாக்குடி அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் மாநில நிதிக்குழு மானிய நிதி திட்டத்தின் கீழ் ரூ.1.32 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு , பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் (19.12.2025) பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்வில் மாநில திட்ட இயக்குநர் எம்.ஆர்த்தி, , பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன் , தொடக்ககல்வி இயக்குநர் நரேஸ், இணை இயக்குநர் குமார், மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.பாலாஜி, நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் தானுமூர்த்தி, துவாக்குடி நகர் மன்ற தலைவர் காயாம்பு, முதன்மை கல்வி அலுவலர் கோ.கிருஷ்ணப்பிரியா, துவாக்குடி நகராட்சி ஆணையர் பட்டுசாமி, பொறியாளர் விஜய்கார்த்திக், பள்ளிக்கல்வித்துறை அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள், அரசுத் துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

எந்திரவியல் ஆய்வகங்களின் சிறப்பம்சங்கள்:

இதற்கான பாடத்திட்டம், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (ஞுஊனுசுவு) மூலம் அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆதரவுடன் தயாரிக்கப்பட்டு உள்ளது.

இப் பா டத் திட் டத் தில் வகுப்பு ஒன்றுக்கு 11 வகையான உபகரணங்கள் வாயிலாக 10 பரிசோதனைகள் உருவாக்கப்பட்டு 90மூ செய்முறை கற்றலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் 15 அரசுப் பள்ளிகளில் 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் விரைவில் இயக்கம் மற்றும் அடிப்படை மின்னணுவியல் ஆகிய தலைப்புகளில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த சுழடிழவiஉள டியடி பாடத்திட்டமானது, மாணவர்களின் கற்றல் திறனில் ஒரு மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

தொழில்நுட்பத் திறன்: எளிய மின்சுற்றுகள் (ஞுiஅp டந உசைஉரவை), பிரட்போர்டு (டீசநயனடிழயசன) பயன்பாடு மற்றும் சென்சார்கள் (ஞுநளெழசள - ருடவசயளழniஉ, புயள ளநளெழச) ஆகியவற்றைக் கையாள்வதன் மூலம் மின்னணுவியல் மற்றும் பொறியியல் சார்ந்த அடிப்படை அறிவை வளர்த்துக் கொள்ள இயலும்.

படைப்பாற்றல் மற்றும் வடிவமைப்பு சிந்தனை: "ஞுழடயச ர்ழரளந", "குசழப டீழவ னுஐலு", "ஞுஅயசவ னுரளவடிin", "ஊயசniஎயட சுனைந" போன்ற திட்டங்கள் மாணவர்களின் கற்பனைத் திறனையும், ஒரு பொருளை புதிதாக வடிவமைக்கும் (னுநளபைn வுhiமெiபெ) திறனையும் ஊக்குவிக்கும்.

சிக்கல் தீர்க்கும் திறன் (Pசழடிடநஅ ளுழடஎiபெ): "ழுடீளவயஉடந யஎழனைiபெ", "டுiநெ குழடடழறநச சுழடிழவ" போன்ற தானியங்கி இயந்திரங்களை உருவாக்கும்போது ஏற்படும் நடைமுறை சிக்கல்களைக் கண்டறிந்து சரிசெய்வதன் மூலம் அவர்களின் பகுப்பாய்வு திறன் மேம்படும்.

இன்றைய நவீன உலகம் செயற்கை நுண்ணறிவு (யுஐ) மற்றும் ரோபாட்டிக்ஸ் துறையை நோக்கி நகர்கிறது. இவ்வகுப்புகள் மாணவர்களுக்கு எதிர்காலத்தில் பொறியாளர்கள், விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களாக உருவெடுக்கத் தேவையான வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொடுக்கும்.

மேற்கண்ட 15 பள்ளிகள் மற்றும் அதனை சுற்றியுள்ள இதர பள்ளிகளுக்கு ர்ருடீ பள்ளியாகச் செயல்பட்டு மற்ற பள்ளிகளின் மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

ஆண்டு இறுதியில் அண்ணா பல்கலைக்கழகத்தின் வாயிலாகச் செய்முறை மற்றும் எழுத்துத் தேர்வுகள் மேற்கொள்ளப்பட்டு, மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

எனவே, இந்த எந்திரவியல் ஆய்வகங்கள் வெறும் தொழில்நுட்பப் பயிற்சி மட்டுமல்ல் இது மாணவர்களின் சிந்தனை முறையையே மாற்றக்கூடிய ஒரு முழுமையான கல்வித் திட்டமாகும். இது அரசுப்பள்ளி மாணவர்களை நாளைய உலகின் சவால்களை எதிர்கொள்ளத் தயார் செய்து, திறன்மிக்க படைப்பாளர்களாக மாற்றும் என்பதில் ஐயமில்லை.

# திருமருகல் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இலவச கண் பரிசோதனை முகாம்




**நாகப்பட்டினம்,டிச.20-**
திருமருகல் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இலவச கண் பரிசோதனை முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நாகை மாவட்டம் திருமருகல் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் திருச்சி தென்னூர் மகாத்மா கண் மருத்துவமனை சார்பில் இலவச கண் பரிசோதனை முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்த முகாமிற்கு வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஹரிஹரன் சுப்பிரமணியன் ஆகியோர் தலைமை வகித்து தொடங்கி வைத்தனர், இதில் மருத்துவர் கோபிகா தலைமையில் கண் பரிசோதகர்கள் கலந்துகொண்டு சுமார் 250 - பேருக்கு மருத்துவ ப ரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. இதில் சத்துணவு பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# ஓம்நமச்சிவாயா அறக்கட்டளை சார்பில் நற்சாந்துபட்டியில் சலவைத்தொழிலாளிக்கு அயர்ன் பாக்ஸ் வழங்கப்பட்டது

**பொன்னமராவதி,டிச.20-**
புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் ஓம் நமச்சிவாய என்ற அறக்கட்டளை இயங்கி வருகிறது.சிங்கப்பூரில் உள்ள நண்பர்கள் மூலம் நிதியுதவி பெறப்பட்டு பல்வேறு வகையான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.அந்த வகையில் திருமயம் அருகே நற்சாந்துபட்டியில் நலிவடைந்த நிலையில் உள்ள சலவைத் தொழிலாளியான வேலுச்சாமி என்பவருக்கு ஓம்நமச்சிவாய அறக்கட்டளை சார்பில் அயர்ன் பாக்ஸை அறக்கட்டளை நிர்வாகிகள் வழங்கினர். இந்நிகழ்வில் ஓம்நமசிவாய அறக்கட்டளை ஒருங்கிணைப்பாளர் கோட்டூர் பாண்டியன், ஓம்நமச்சிவாயா அறக்கட்டளை நிர்வாகி ஆசிரியர் கருப்பையா,மலம்பட்டி ராசு, ராம ச்சந்திரன்,வேலுச்சாமி பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# கஜாசம்கார மூர்த்திக்கு சிறப்பு அபிஷேகம்

**திருத்துறைப்பூண்டி,டிச.20-**
திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி அருள் மிகு பிறவி மருந்தீசர்திருக்கோவிலில் அமாவாசை முன்னிட்டு கஜாசம்கார மூர்த்திக்கு சிறப்பு அபிஷேகம் தொடர்ந்து தீபாரதனை நடைபெற்றது. இதில் சர்வாலாய உழவாரப் பணி குழு சார்பில் சிறப்பு கூட்டுப் பிரார்த்தனைகள் நடைபெற்றது. இறைவனின் அவதாரத்தில் கஜசம்ஹார மூர்த்தி மிகவும் சிறப்பானது நமது ஒவ்வொருத்தருக்கும் இருக்கும் கர்ம வினை குறைக்கக்கூடிய ஒரே பகவான் கஜ சம்ஹார மூர்த்தி ஆவார். ஒவ்வொரு அமாவாசையும் காலையில் கூட்டு பிரார்த்தனை நடைபெறுகிறது. தடைபட்ட காரியங்கள் வெற்றி அடைய மேலும் திருமண தடைகள் குழந்தை பாக்கியம் பேரு மேல் பதவி கிடைக்க அனைத்து புண்ணியமும் கிடைக்கும். சிறப்பு பூஜைகளை சிவாச்சாரியார் வினோத் மற்றும் கோவில் பணியாளர்கள் செய்திருந்தனர்.

# பெரம்பலூர் மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் வரைவு வாக்காளர் பட்டியல்

## கலெக்டர் ந.மிருணாளினி வெளியிட்டார்




**பெரம்பலூர்,டிச.20-**
இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் வரைவு வாக்காளர் பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலர் / கலெக்டர் ந.மிருணாளினி மாவட்ட கலெக்டர் அலுவக கூட்ட அரங்கில் வெளியிட்டார்.

பின்னர் கலெக்டர் தெரிவித்ததாவது,

பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 இன் ஒரு பகுதியான வாக்காளர் கணக்கெடுப்பு பணிக்காக 27.10.2025 அன்று வரை 147 பெரம்பலூர் (தனி) சட்டமன்ற தொகுதி, 148 குன்னம் சட்டமன்ற தொகுதி ஆகியவற்றில் இடம் பெற்றிருந்த 5,90,490 வாக்காளர்களுக்கும் கணக்கீட்டுப் படிவங்களை வழங்கி கணக்கெடுப்பு செய்யப்பட்டது.

கணக்கெடுப்புப் பணி 14.12.2025 அன்றுடன் நிறைவடைந்துள்ளது.இப்பணியில் 105 சிறப்பு அலுவலர்களும், 652 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும் (BLO), அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளால் நியமனம் செய்யப்பட்ட 2,277 வாக்குச்சாவடி நிலை முகவர்களும் (BLA-2) மற்றும் இல்லம் தேடிக்கல்வி குழுவினர், மகளிர் சுய உதவிக்குழுவினர், ஊராட்சிகளின் கணினி இயக்குபவர்கள் என 783 தன்னார்வலர்களும் ஈடுபடுத்தப்பட்டனர். மேலும் SIR - 2026 -இன் போது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மற்றும் அரசியல் கட்சியினரின் பங்களிப்பு குறித்து விளக்கமளிக்கும் விதமாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினருடன் 11 ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப் பட்டுள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் SIR - 2026-இன் கணக்கெடுப்பு கட்டம் மற்றும் வாக்குச்சவாடிகளின் மறுசீரமைப்பு ஆகியவற்றை ஒருங்கிணைத்து புதிய வாக்குச்சாவடிகள் வாரியாக வெளியிடப் பட்டுள்ள வரைவு வாக்காளர் பட்டியலில் 147 பெரம்பலூர் (தனி) சட்டமன்ற தொகுதியில் உள்ள 387 வாக்குச்சாவடிகளில் மொத்தம் 2,80,566 வாக்காளர்கள் உள்ளனர். இதில் 1,36,304 ஆண் வாக்காளர்களும் 1,44,235 பெண் வாக்காளர்களும், 27 மூன்றாம் பாலின வாக்காளர்கள் உள்ளனர். இதில் இறந்துபோன வாக்காளர்கள் 12,965 பேர், இன்னாரென்று அறிய இயலாத வாக்காளர்கள் 4,340 பேர், நிரந்தரமாக வெளியேறிவர்கள் 10,329பேர், இரட்டைப்பதிவுள்ள வாக்காளர்கள் 1725 பேர், இதரர் 17 பேர் என மொத்தம் 29,376 வாக்காளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். மேலும் 148 குன்னம் சட்டமன்ற தொகுதியில் உள்ள 345 வாக்குச்சாவடிகளில் மொத்தம் 2,60,376 வாக்காளர்கள் உள்ளனர். இதில் 1,28,817 ஆண் வாக்காளர்களும் 1,31,556 பெண் வாக்காளர்களும், 3 மூன்றாம் பாலின வாக்காளர்கள் உள்ளனர். இதில் இறந்து போன வாக்காளர்கள் 9,995 பேர், இன்னாரென்று அறிய இயலாத வாக்காளர்கள் 636 பேர், நிரந்தரமாக வெளியேறிவர்கள் 7,732பேர், இரட்டைப் பதிவுள்ள வாக்காளர்கள் 1801 பேர், இதரர் 8 பேர் என மொத்தம் 20,172 வாக்காளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். ஆக மொத்தம் இரண்டு தொகுதிகளையும் சேர்த்து இறந்து போன வாக்காளர்கள் 22,960 பேர், இன்னாரென்று அறிய இயலாத வாக்காளர்கள் 4,976 பேர், நிரந்தரமாக வெளியேறிவர்கள் 18,061 பேர், இரட்டைப்பதிவுள்ள வாக்காளர்கள் 3526 பேர், இதரர் 25 பேர் என மொத்தம் 49,548 வாக்காளர்கள் நீக்கப்பட்டள்ளனர்.

மேலும் இந்திய தேர்தல் ஆணையம் 01.01..2026-ஐ தகுதி நாளாகக் கொண்டு 18 வயது பூர்த்தியடைந்துள்ள வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கும், வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் திருத்தம், பெயர் நீக்கம், முகவரி திருத்தம் உள்ளிட்ட திருத்தங்கள் மேற்கொள்ளவும் 19.12.2025 முதல் 10.02.2026 வரை விண்ணப்பங்கள் பெறப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர் / கலெக்டர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் க.கண்ணன், வாக்காளர் பதிவு அலுவலர்கள் திரு ந.சக்திவேல், மு.அனிதா, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் அனைத்து வட்டாட்சியர்கள் கலந்துகொண்டனர்.

